# சாப்பிட்டுத்தான் பார்ப்போமே!

மூலக்கதை
HO LEE-LING

ஓவியர்
DREWSCAPE



HO / DREWSCAPE

சாப்பிட்டுத்தான் பார்ப்போமே!

MINISTRY OF EDUCATION



உங்களுக்கு டுரியான் பழங்கள் பிடிக்குமா? எனக்குப் பிடிக்காது.
ஆனால், என் எண்ணத்தை மாற்றிக்கொள்ளும் வகையில் பல
சம்பவங்கள் நிகழ்கின்றன!

ISBN 978-981-012-808-1
9 789810 128081

Marshall Cavendish Education

Ministry of Education
SINGAPORE

# சாப்பிட்டுத்தான் பார்ப்போமே!

## இந்தப் புத்தகத்தை எவ்வாறு பயன்படுத்தலாம்?

மீள்நோக்கிப் பார்க்கும் திறன்கொண்ட பிள்ளைகள் வாழ்நாள் கற்றலில் ஈடுபடுகின்றனர்.

மீள்நோக்கிப் பார்க்கும் திறனைக்கொண்ட பிள்ளையால்:
- பின்னோக்கிப் பார்க்க இயலும்
- அதிலிருந்து கற்றுக்கொள்ள இயலும்
- மேலும் சிறப்பாகச் செய்ய இயலும்

இக்கதையில் வரும் சிறுவன் எதைச் செய்தாலும் மீள்நோக்கிப் பார்த்துச் செயற்படுகிறான்.
இக்கதையை நீங்கள் உங்களின் பிள்ளைகளிடம் படித்துக்காட்டும்போது மீள்நோக்கும் வழிமுறைகளை அவர்களுக்கு எடுத்துரைக்கலாம். சில பரிந்துரைகள் பின்வருமாறு:

### பின்னோக்கிப் பார்த்தல்

கதையில் வரும் “நான் திடுக்கிட்டு எழுந்தேன்; யோசித்தேன்.” என்னும் தொடரின்மூலம் சிறுவன் மீள்நோக்குகிறான் என்பதை வலியுறுத்தவும்.
*இந்தக் கேள்விகளைக் கேட்கவும்:* *சிறுவன் எதை யோசித்துப் பார்க்கிறான்?*
*டுரியான் பழத்தைப்பற்றி என்ன கூறினான்? (தோற்றம்/வாசம்/சுவை)*

### அதிலிருந்து கற்றுக்கொள்ளுதல்

*இந்தக் கேள்விகளைக் கேட்கவும்:* *சிறுவனுக்கு ஏன் டுரியான் பிடிக்கவில்லை?*
*அவன் ஏன் டுரியானைச் சாப்பிட்டுப் பார்க்க நினைத்தான்?*
சிறுவன் டுரியானைச் சாப்பிட்ட பிறகு என்ன கற்றுக்கொண்டான் என்பதைக் கலந்துரையாடவும்.
கற்றுக்கொண்ட பாடம் - எடுத்துக்காட்டு: புதியனவற்றில் ஈடுபடும்போது துணிந்து செயற்படுதல் வேண்டும்.

### மேலும் சிறப்பாகச் செய்தல்

*இந்தக் கேள்விகளைக் கேட்கவும்:*
*கதையின் இறுதியில், சிறுவன் எல்லாப் பழங்களையும் சுவைத்துப் பார்க்க நினைத்தது ஏன்?*
சிறுவனின் மீள்நோக்கும் வழிமுறையை நினைவுகூரவும்.



# சாப்பிட்டுத்தான் பார்ப்போமே!

மூலக்கதை: **Ho Lee-Ling**
ஓவியர்: **Drewscape**



Ministry of Education
SINGAPORE

என் வீட்டில் எல்லாருக்கும் டுரியான் என்றால் கொள்ளை ஆசை.






D24
1 for $5
D24
3 FOR $10




அம்மாவுக்கு அதைப் பார்த்தாலே பிடிக்கும்.
“ம்... அழகோ அழகு!” என்பார்.



அப்பாவுக்கு அதன் வாசம் பிடிக்கும்.
“ம்...வாசமோ வாசம்!” என்பார்.



அக்காவுக்கு அதன் சுவை பிடிக்கும்.



“ம்...சுவையோ சுவை!” என்பார்.



அப்பா என்னையும் சாப்பிடச் சொன்னார்.



"சுவைத்துப் பார்! இது பழங்களின் அரசன்!" என்றார்.





ஆனால்,

எனக்கு டுரியான் என்றாலே பிடிக்காது.

அதன் வாசம் பிடிக்காது.

அதன் தோற்றம் பிடிக்காது.

அதைச் சாப்பிட எனக்குப் பிடிக்கவே பிடிக்காது!



அன்று இரவு நான் ஒரு கனவு கண்டேன்.
பெரிய பெரிய டுரியான்கள்; சிறிய சிறிய டுரியான்கள்.



வட்ட வட்ட டுரியான்கள்;
சதுரமான டுரியான்கள்.





எல்லா டுரியான்களும்
ஒன்றுசேர்ந்து பாடின.

“சுவைத்துப் பார்.
சுவைத்துப் பார்.

எங்களை நீ
சுவைத்துப் பார்.

வாசத்தைப் பார்க்காதே.

தோற்றத்தைப் பார்க்காதே.

எங்களை நீ
வெறுக்காதே.

பிடிவாதம் பிடிக்காதே!”

நான் திடுக்கிட்டு எழுந்தேன்; யோசித்தேன்.

டுரியானின் சுவை எப்படி இருக்கும்?

சாப்பிட்டுத்தான் பார்ப்போமே!






அன்று... எங்குப் பார்த்தாலும் டுரியான்கள்!
எல்லாருடைய கைகளிலும் டுரியான்கள்!



நான் மட்டும் இன்னும் சுவைத்துப் பார்க்கவில்லை.



அன்று இரவு அப்பா டுரியான்கள் வாங்கி வந்தார்.



சாப்பிட்டுத்தான் பார்ப்போமே!



எனக்கு அதன் வாசமும் பிடிக்கவில்லை;
தோற்றமும் பிடிக்கவில்லை.



ஆனால், அதன் சுவை பிடித்திருக்கிறது!
‘ம்... சுவையோ சுவை!’



மறுநாள் நாங்கள் ஒரு பழக்கடைக்குச் சென்றோம்.
அப்பா, ரம்புத்தான் தந்தார். “சாப்பிட்டுப் பார்!” என்றார்.



அம்மா கொய்யாப்பழம் தந்தார். “சாப்பிட்டுப் பார்!” என்றார்.
அக்கா பலாப்பழம் தந்தார். “சாப்பிட்டுப் பார்!” என்றார்.



எனக்கு இந்தப் பழங்களின் தோற்றமும் பிடிக்கவில்லை.
வாசமும் பிடிக்கவில்லை. ஆனால், டுரியானைப் போல
இவையும் சுவையாக இருக்குமோ!



சரி! சாப்பிட்டுத்தான் பார்ப்போமே!

## எழுத்தாளரைப்பற்றி

Lee-Ling சிங்கப்பூர் எழுத்தாளரும் வரலாற்றாசிரியரும் ஆவார். அவர் டிவா, பிரின்ஸ்டன் என்னும் இரு பூனைகளுடன் வசிக்கிறார். அவருக்கு ரம்புத்தான், மங்குஸ்தீன், பப்பாளி ஆகிய பழங்கள் பிடிக்கும்.

## ஓவியரைப்பற்றி

Andrew Tan (Drewscape) சிங்கப்பூர் ஓவியராவார். அவருக்கு வாசிப்பதும் கேலிச்சித்திரம் வரைவதும் மிகவும் பிடிக்கும். பீச் பழங்களும் விதைகளில்லா திராட்சைப்பழங்களும் அவருக்குப் பிடித்தமான பழங்களாகும் (அவற்றை cambozola பாலாடைக்கட்டியுடன் சாப்பிடுவார்). அவர் சிறு பிள்ளையாக இருந்தபோது அளவுக்கு அதிகமாக டுரியான் சாப்பிட்டதால் அது அவருக்குப் பிடிக்காமல் போய்விட்டது. ஆனால், இப்போது அவர் அதை மீண்டும் சாப்பிடப் பழகி வருகிறார்.

**Acknowledgements**
We would like to express our appreciation to the following parties for their contribution and assistance in making this publication possible:

- Ms S.S Mary Sarabia of PCF Bishan East Blk 197, Mdm Mubarak Begum w/o Mohamed Siddiqe of Jamiyah Kindergarten, Mdm Arunhachelam Shanthi, Mdm Pandiyaraja Ramathilagam and Mdm Sujatha Pragatheeswaran of Ramakrishna Mission Sarada Kindergarten, and Mdm Chettiar Alagumalliga of Saraswathy Darma Muneeswaran Kindergarten; and
- Curriculum Planning and Development Division, MOE.

**© 2014, Ministry of Education**
**Republic of Singapore**

**Published by Marshall Cavendish Education**
*An imprint of Marshall Cavendish International (Singapore) Private Limited*
Times Centre, 1 New Industrial Road, Singapore 536196
Customer Service Hotline: (65) 6213 9444
E-mail: tmesales@sg.marshallcavendish.com
Website: www.marshallcavendish.com/education

Marshall Cavendish is a trademark of Times Publishing Limited.

First published 2014

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval systerm, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying or otherwise, without prior permission of the copyright holder.

ISBN 978-981-01-2808-1

Printed in Singapore by Times Printers, www.timesprinters.com

Designed by ampulets